Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    மார்கழி 03    (18 - 12 - 1991)    புதன்கிழமை    ஓசை: 303

## கடற்படையின் நடவடிக்கை; முத்திரைவராமைக்கு காரணம்

யாழ் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள முத்திரைத் தட்டுப்பாட்டிற்குக் காரணம் கடந்த செப்ரெம்பர் மாதத்திலிருந்து தலைமை அலுவலகத்திலிருந்து முத்திரைகள் யாழ். மாவட்டத்திற்கு அனுப்பாமையே என யாழ்ப்பாண பிரதம தபாலதிபர் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள தபாலகங்கள் எவற்றிலும் எந்த விலை முத்திரைகளும் இல்லாதமையிட்டு அவர் நேற்றுக் கூறுகையிலேயே இவ்வாறு கவலை தெரிவித்தார். இது தவிர யாழ். மாவட் (4 பக்கம் பார்க்க)

# வடகிழக்கு இணைந்த தன்னாட்சி

# தொண்டமானின் தீர்வு திட்டம்

### பாதுகாப்புத் தீவிரம்

டிசம்பர் 21 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் 'சார்க்' நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டை முன்னிட்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த சுயாட்சி அமைப்பு (INSTITUTION FOR AUTONOMY) திட்டம் ஒன்றை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் திரு. தொண்டமான் பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளார். இந்த தீர்வுத் திட்டத்தின் விபரங்களை நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகள் வெளியிட்டனர்.

வடக்கு கிழக்கு ஒரே பிரதேசமான ஆட்சியமைப்பு, காணி உரிமை, கல்வி, பொருளாதார திட்டமிடல், நீதிபரிபாலனம், பொலிஸ் சேவை உட்பட 36 துறைகளை நிர்வகிப்பதற்கான அதிகாரப் பரவலாக்கம் கொண்டதாக இத் திட்டம் அமைந்துள்ளது.

இந்த நகல் திட்டத்தின் முக்கிய அம்சம் வடக்கு - கிழக்கு இணைந்த சுயாட்சி அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும் என்பதாகும். சுயாட்சி அமைப்பு என்ற வாசகம் ஒரு தற்காலிக ஏற்பாடாகும். பிரதேச சபை, மாகாணசபை, மாகாண அரசு, மண்டல சபை !- எப்பெயரை வேண்டுமானாலும் சூட்டிக் கொள்ளலாம் என்று இந்த நகல் திட்டத்தின் முன்னுரையில் தெரிவிக்கப்படுகிறது.

சுயாட்சி அமைப்பு (Institution for Autonomy) திட்டத்தின் அம்சங்கள் வருமாறு:

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்த சுயாட்சித்திட்டமாக இது அமையும். முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் நியமிக்கப்படுவார். இவர் ஐந்து வருடகாலம் பதவி வகிப்பார். ஆளுநரின் பணிகள், அதிகாரங்கள் ஆகியன வரையறுக்கப்படவில்லை.

### முதலமைச்சரின் நியமனமும்,

## யாழ். காவல்துறை பணிமனை பிரதேசம் வரையறுப்பு

### 24 மணி நேரமும் முறைப்பாடு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் காவல்துறையினரின் யாழ் பணிமனையின் பிரதேசம் வரையறுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் யாழ். காவல்துறை பணிமனையில் பின்வரும் பகுதிகளில் வாழும் மக்கள் தமது முறைப்பாடுகளை எந்நேரத்திலும் பதிவு செய்து கொள்ளலாம். மக்களின் நலனை கருத்திற்கொண்டு காவல் துறை 24 மணி நேரமும் தொடர்ச்சியாக இயங்கி வருகின்றது.

யாழ். காவல்துறை பணிமனையில், யாழ் நகர், அரியாலை, கொழும்புத்துறை, நாவலர்பூர், குருநகர், கொட்டடி, நாவாந்துறை, பொம்மைவெளி, மருதடிப்பிள்ளையார் கோவிலடிச்சந்தி கோண்டாவில் மேற்கு, நல்லூர், திருநெல்வேலி, சுதுமலை, மக்கள் தமது முறைப்பாடுகளை தெரிவித்துக்கொள்ளலாம்.

மேலும் தமிழீழக் காவல்துறையினரின் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன; அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைத் தடுப்பதிலும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 10 குருநகர் மீனவர்கள் கடற்படையால் கைது

### குடும்பத்தினர் செஞ்சிலுவையிடம் முறையீடு

(குருநகர்)

குடாக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற நான்கு பாய் வள்ளங்கள் திரும்பி வரவில்லை. இழுத்துச் சென்றதென்றும் அப்பகுதியில் வெகுதூரத்தில் நின்று திரும்பிய மீன்பிடி வள் (4 ஆம் பக்கம் பார்க்க)

மண்டல சபை :- எப்பெவரை கள் இணைந்த சுயாட்சித்திட்ட

# '36 துறைகளில் அதிகாரப் பரவலாக்கல்'

(யாழ்ப்பாணம்)

இ: தொ. கா. தலைவர் திரு. தொண்டமான் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்காவிற்கு அனுப்பி வைத்துள்ள நகல் திட்டத்தில் கீழ் வரும் 36 துறைகளும் சுயாட்சி அமைப்பினால் அதிகாரப்பரவலாக்கல் கொண்டதாக உள்ளது.

★ நிலம்
★ சட்டமும் ஒழுங்கும்
★ திட்டமிடுதலும் பொருளாதார விவகாரங்களும்
★ நிதி ஒழுங்குகள்
★ மாகாண பொதுச்சேவை
★ கல்வி
★ காட்டு வளம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நியமனமும், அமைச்சரவையும்

அமைச்சர் எஸ். தொண்டமானின் ஆலோசனையின் பிரகாரம், தேர்தலில் ஐம்பது விகிதத்திற்கும் மேலான ஆசனங்களைப் பெறும் கட்சியின் தலைவர் முதலமைச்சராக ஆளுநரால் நியமிக்கப்படுவார். மேலும் பத்து அமைச்சர்களையும் சுயாட்சி அமைப்பு நிறுவனத்துக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களிடையே இருந்து முதலமைச்சர் தெரிவு செய்து நியமிப்பார். சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை தெரிவிக்கப்படவில்லை.

(3 ஆம் பக்கம் பார்க்க)

சென்ற நாலு றோலர் வள்ளங்கள் திரும்பி வரவில்லை. அதில் சென்ற பத்துக்கும் மேற்பட்ட மீனவர்களின் நிலைமையும் தெரியவில்லை.

குருநகரிலிருந்து கடந்த திங்கட்கிழமை (16-12-91) மாலை சென்ற மேற்படி வள்ளங்களே திரும்பி வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நாலு வள்ளங்களும் மாலைதீவுக்கு அண்மையாக சென்றன வென்றும், இடையேவந்த சிறிலங்கா கடற்படையினரின் ரோந்துப் படகு அவற்றைத் தொடுத்து

நின்று திரும்பிய மீன்பிடி வள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

விபத்துக்களைத் தடுப்பதிலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தின் பிடியினுள் தீவகத்தில் 10,554 பேர்

கடந்தகால சிறிலங்கா இராணுவ சுற்றிவளைப்பின்போது தீவகப் பகுதியில் 10,554 பேர் இராணுவப் பிடிக்குள் சிக்கியுள்ளதாகக் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

அரசாங்க அதிபரின் கொழும்பு விஜயத்தின்போதே மேற்படி புள்ளிவிபரம் கூட்டுப்படைத் தலைமையகத்தினரால் அரசாங்க அதிபரிடம் வழங்கப்பட்டது. இதன்படி காரைநகர் 970, ஊர்காவற்துறை 484, மண்டைதீவு 30, புங்குடுதீவு 661, நயினாதீவு 5076, அனலைதீவு 2905, எழுவைதீவு 428 பேரும் உள்ளனர் என தெரியவருகிறது.

இவர்களது பெயர் விபரங்களை உடனடியாகத் தனக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் கூட்டுப்படைத் தலைமையகத்திடம் கேட்டுள்ளார்.

(ச)

# குண்டுவீச்சைக் கண்டித்து மாணவர்கள் கூட்டம்

மன்னார் மாவட்ட பண்டிவிரிச்சான் தமிழ் கலவன் பாடசாலையில் இடம் பெற்ற விமானக் குண்டுவீச்சு தாக்குதலை கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவரவையினர் கண்டனக் கூட்டமொன்றை நடத்தவுள்ளது.

இக்கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் எனவும், அனைத்துப் பீட மாணவர்களையும் சமுகமளிக்குமாறும் மாணவரவை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகாரப் பரவலாக்கம்; திட்டத்தில் தெளிவில்லை

அமைச்சர் எஸ். தொண்டமானினால் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நகல்திட்டத்தில் பல அம்சங்கள் தெளிவாகத் தரப்படவில்லை; இதில் திருத்தங்களுக்கு இடமுண்டு என்று சொல்லப்பட்டபோதிலும், தெளிவுபடுத்தப்படாத அம்சங்கள் அதிகாரப் பரவலாக்கல், சுயாட்சி அமைப்பிற்கும் மத்திய அரசிற்கும் இடையில் உள்ள தொடர்புகள் போன்ற முக்கிய விடயங்களும் இதில் இடம்பெறவில்லை.

ஆட்சி அமைப்பின் பிரதான அம்சமாக விளங்குவது ஆட்சி செய்வதற்குத் தேவையான சட்டங்களை உருவாக்குவதாகும்; மற்றும் சுயாட்சியமைப்பை நடாத்துவதற்கான சட்டங்களை உருவாக்குவதும், அதனைச் செயற்படுத்துவதும் ஒரு ஆட்சி அமைப்பின் பிரதான பணிகளாகும். அமைச்சர் எஸ் தொண்டமானினால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தைப்பொங்கல் தினத்தன்று 'சுதந்திர பிரகடனம்'

விடுதலைப் புலிகள் வரும் ஜனவரி 14 ஆம் திகதி அன்று யாழ்ப்பாண பகுதியை தனி நாடு என்று பிரகடனப் படுத்தத் திட்டமிட்டு வருவதாக லங்காதீப்பா என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியில் தனிநாட்டுக்கான பொது நிர்வாகத்தைத் தொடங்கும் வகையில் [illegible] திட்டமிட்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

எட்டுப் பொலிஸ் நிலையங்களும், ஐந்து தபால் அலுவலகங்களும், இரண்டு தொழிற்துறை தொடர்பு மையங்களும், இயங்குவதாகவும் நீதிமன்ற அலுவல்களுக்கென இளைப்பாறிய வழக்கறிஞர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளதாகவும் அரசதரப்புச் செய்திகளை மேற்கோள்காட்டி லங்காதீப்பா செய்தி வெளியிட்டுள்ளது.

# சமாதானத்தில் நாட்டமில்லை

# யுத்த முஸ்தீபிலேயே அரசு கவனம்

## பத்திரிகையாளர் மத்தியில் பாலசிங்கம்

சிறிலங்கா அரசாங்கத்திற்கு சமாதான முறையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் நாட்டம் எதுவுமில்லை இராணுவ நடவடிக்கையின் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவே அரசாங்கம் முனைகின்றது. அதற்கான யுத்த முஸ்தீபுகளிலும் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது என நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

மேலும், அவர், பொருளாதாரத் தடை மற்றும் இராணுவ நடவடிக்கைகளின்மூலம் தமிழ் மக்களைப் பட்டினிச் சாவுக்கு தள்ளி புலிகளுடன் பேசலாமென்று சிறிலங்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மாலைதீவு ராணுவத்திற்கு சிறிலங்காவில் பயிற்சி

(கொழும்பு)

மாலைதீவு இராணுவ வீரர்களுக்கு இலங்கையில் இராணுவப் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கம் பல்துறைகளில் மாலைதீவிற்கு உதவி அளிக்கும் என்றும், இதன் படியே மாலைதீவு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆண் தையற்காரர் தேவை

ஆண்களுக்கான உடைகள் வெட்டித், தைக்கவும், தையல் கடைநடாத்தவும் அனுபவமுள்ளவர்களும் உடன் தேவை.

அனுபவத்திற்குரிய ஆவணங்களுடன் எதிர்வரும் சனிக்கிழமை (21-12-1991) காலை 9-00 மணிக்கு ஈழநாதம் காரியாலயத்திற்கு நேரில் வரவும்.

(R/2013)

## பாரதிதாசன் கல்வி நிறுவனம்

(BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**A/L 93**

புதிய பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 8-00 | 9-00 | தமிழ் | திருமதி மீரா |
| | | | ) மரியதாஸ் |
| 8-00 | 9-00 | கணக்கியல் | ) யோகராஜா |
| | | | ) சௌந்தி |
| 9-00 | 10-00 | புவியியல் | ஜோசப் |
| 10-00 | 11-00 | அளவையியல் | S. S. மனோகரன் |
| 11-00 | 12-00 | பொருளியல் | வரதராஜன் |
| 12-00 | 1-00 | இந்துநாகரிகம் | திருமதி அருள்நங்கை |
| 1-90 | 2-00 | வர்த்தகம் | பிரபல ஆசிரியர் |
| 1-00 | 2-00 | அரசியல் | செல்வரட்ணம் |

ஆரம்பம்:- 21-12-91

சனி - காலை 8-00 மணி

குறிப்பு:-

முதலாவது பிரிவு முன்னர் அறிவித்தது போன்று 4-1-92ல் ஆரம்பமாகும். (B/3644)

## வரி விளம்பரம்

**I. A. B.**

International Association of Book - Keepers (London) Final Examination தகைமை G. C E. A/L கணக்கியலில் சித்தி. வகுப்புகள் ஆரம்பம்: 21-12-91, 1-00 மணி School of Business Administration 16, 5ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (B/3640)

**தாச்சிச் சுற்றுப்போட்டி**

சுதுமலை ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்படும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பம். இதில் அனைத்து விளையாட்டுக் கழகங்களையும் சமூகம் தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். இ. ராசன் ஐங்கரன் விளையாட்டுக் கழகம (R/2012)

**"நீமியா உரம்"**

வலிகாமம் மேற்கு விவசாயிகளுக்கு அரிய சந்தர்ப்பம். உலகில் அபிமான "நீமியா" இயற்கை உரம் சங்கானை ப.நோ.கூ. சங்கக் கிளைக் கடைகளிலும், அராலி கொட்டைக்காடு சிவ ஐங்கரன் ஸ்ரோர்ஸிலும் கிடைக்கிறது. - "மிக்கைற" (B/3645)

## வழிப்படுத்தும் பயிற்சி

[illegible]. முதல் வர்த்தக கற்கை நெறிக்கு பதிவு செய்துள்ள மாணவர்களுக்கு 23 - 12 - 91 தொடக்கம் 03-01-92 வரை வழிப்படுத்தும் பயிற்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் இடம் பெறவுள்ளது. இக்கற்கை நெறிகளுக்கு பதிவுசெய்துள்ள மாணவர்களை இப்பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு வெளிவாரிப் பட்டப்படிப்பு இணைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.


## கம்பியூட்டர் கல்வி

- Basic
- dBase III+
- Lotus 1 - 2 - 3
- Word Star

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

23 - 12 - 91 — 1.30 p.m.

28 - 12 - 91 — 1.30 p.m.

Personal Computer Operating System

காலம்: 1 மாதம்

கட்டணம்: ரூபா 1000/ மட்டும்

ஆரம்பம்: 23.12.91—28.12.91

வடமராட்சி மாணவர்களுக்கோர் நற்செய்தி!

தற்போதுள்ள போக்குவரத்துச் சிரமத்தையால் உங்கள் நலன் கருதி எமது நிறுவனத்தின் கிளை ஸ்தாபனம் ஒன்று வடமராட்சியில் ஆரம்பிக்கப்பட உள்ளதென்பதை மனநிறைவுடன் தெரியப்படுத்துகின்றோம்.

பிரத்தியேக வகுப்புக்கள் எந்த நாட்களிலும் ஆரம்பமாகும்

தொடர்புகளுக்கு:-




**Unico Computer Centre**

73, Clock Tower Road, Jaffna.

யுனிக்கோ கணனி கல்வி நிறுவனம்

37, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

(B-3652)


## 91-வது நாள் நினைவஞ்சலி

புதிய உயர் கல்லூரி

நினைவு



| | | | |
|---|---|---|---|
| | | | ) மரியதாஸ் |
| 8-00 | 9-00 | கணக்கியல் | ) யோகராஜா |
| | | | ) சௌந்தி |
| 9-00 | 10-00 | புவியியல் | ஜோசப் |
| 10-00 | 11-00 | அளவையியல் | S. S. மனோகரன் |
| 11-00 | 12-00 | பொருளியல் | வரதராஜன் |
| 12-00 | 1-00 | இந்துநாகரிகம் | திருமதி அருள்நங்கை |
| 1-00 | 2-00 | வர்த்தகம் | பிரபல ஆசிரியர் |
| 1-00 | 2-00 | அரசியல் | செல்வரட்ணம் |

ஆரம்பம்:- 21-12-91

சனி - காலை 8-00 மணி

குறிப்பு:-

முதலாவது பிரிவு முன்னர் அறிவித்தது போன்று 4-1-92 ல் ஆரம்பமாகும். (B/3644)

...ரோர்ஸிலும் கிடைக்கிறது.
- "மின்னல்" (B/3645)

## வழிப்படுத்தும் பயிற்சி

க.பொ.த. உயர்தர வர்த்தக பிரிவிற்கு பதிவு செய்துள்ள மாணவர்களுக்கு 23-12-91 தொடக்கம் 03-01-92 வரை வழிப்படுத்தும் பயிற்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் இடம் பெறவுள்ளது. இவ்வகுப்புக்களுக்கு பதிவுசெய்துள்ள மாணவர்களை இப்பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு வெளிவாரிப் பட்டப்படிப்பு இணைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## Unico Computer Centre

தொடர்புகளுக்கு:-



**Unico Computer Centre**
73, Clock Tower Road,
Jaffna.

**யுனிக்கோ கணனி கல்வி நிறுவனம்**
37, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

(B-3652)

## 91-வது நாள் நினைவஞ்சலி



**வீரவேங்கை காமராஜி**

(இராமையா ஆத்மஜோதி)

பிறப்பு 2-2-1971 — இறப்பு 19-9-1991

தமிழ் மானம் பெரிதென்று வாழ்ந்தாய் நீ
தமிழ் இனம் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும்
என்றாய் நீ
தமிழ் ஈழம் தான் இதற்குவழியென மொழிந்தாய் நீ
தமிழ் ஈழ ஜோதியென நாம் கண்ட ஆத்மஜோதியே
தமிழ் காத்திட்ட இனாகப் பெயர்கொண்ட
காமராஜியே
தமிழ் ஈழ முரசுகோட்டையில் உதித்து நீ
மறைந்தாலும்
உன் நாமம் என்றும் நிலையானது தங்கையே.

இன்று எமதில்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு இயக்க உறுப்பினர்களையும், உற்றார், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முரசுமோட்டை,
பரந்தன். (R/2011) -குடும்பத்தினர்

## புதிய உயர் கல்லூரி
**(NEW COLLEGE OF HIGH STUDIES)**

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**A/L 93**
ஆரம்பம்:-
21-12-1991
காலை 7-00 மணி

**A/L 92**
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன

**A/L 91, 92**
**DAY CLASSES**
நடைபெறுகின்றன

(B/3650) — நிர்வாகி

## புதிய உயர் கல்லூரி
**NEW COLLEGE OF HIGH STUDIES**

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**O/L ஆண்டு 10, 9**

புதிய வகுப்புக்கள்
ஆரம்பமாகிவிட்டன
விஞ்ஞானம்:- இரா. செல்லவடிவேல்
கணிதம்:- கதிர்
தமிழ்:- ரவி
சமூகக்கல்வி:- ராஜன்
ஆங்கிலம்:- கிரிசான், சிவலிங்கம்
வர்த்தகம்:- மகேஸ்

(B/3651)

## நினைவு கூருகின்றோம்...



**1991 - 12 - 18**

லெப்டினன்ட்
**கடாபி**

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் புலோப்பளை சிறிபுரசந்தியில் சிறிலங்காப் படையினரின் வாகனத்தொடர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

லெப். கடாபி (வேலுப்பிள்ளை கிஷ்ணானந்தன் - 5-ம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு)

லெப். ஐங்கரன் (சுப்பிரமணியம் நற்குணம் - நிலாவெளி, திருக்கோணமலை)

மன்னார் மரப்புக்கடத்தான் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது காயமுற்ற நிலையில் தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய

லெப். நிதி (இறிஸ்தநாதன் சுதாகர் - வண்ணாங்குளம், மன்னார்)

1986 ஆம் ஆண்டு மட்டக்களப்பு தாண்டியடி பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

ரவிக்குமார் (மயில்வாகனம் புண்ணியமூர்த்தி - தம்பிலுவில் - 01, அம்பாறை)

இதே பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

லெப். கமலன் (சிவசுந்தரம் இராசநாயகம் - கோயில் வீதி, தம்பிலுவில் - 02, அம்பாறை)

1987 ஆம் ஆண்டு கட்டுவனில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

பன்னீர் (நாகலிங்கம் பன்னீர்செல்வம் - ஏழாலை தெற்கு)

மந்துவிலில் எமது முகாம் ஒன்றின் மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய

கணேஷ்

கோண்டாவில், காரைக்கால் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது வீரச்சாவெய்திய

தனுஷ் (வைத்திலிங்கம் வசீகரன் - தெல்லிப்பளை)

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, பட்டிருப்பு பகுதியில் எதிர்பாராத விதமாக பொறிவெடியில் சிக்குண்டு சாவடைந்த

2 ஆம் லெப். வோல்டர் (கந்தசாமி இராஜபிரகாசம் - குருக்கள்மடம், மட்டக்களப்பு)

திருக்கோணமலை நகர், சமாதிப்பிள்ளையார் கோயிலடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்டு சாக்குப்போட்டு எரிக்கப்பட்ட, குழந்தைகள் பெண்கள் உட்பட 5 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(B/3648) **விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

## சிந்தனைக்கு

(சமரசத்தூதில்) கடிதங்கள் எழுதுவதை விட பேச்சுவார்த்தைகள் நடத்தி பிரச்சினைகளைத் தீர்ப்பது நல்லது.

— பைரன் பிரபு

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 18-12-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# அரசின் சிந்தனையில் சமா. தீர்வு இல்லை

"சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா புத்திசாலித்தனமான, அதேவேளை அபாயகரமான ஆட்டம் ஒன்றை ஆடுகின்றார். ஒரு புறம் இராணுவத்தினரையும், மறுபுறம் சமரசப் பேச்சாளர்களையும் ஊக்குவிக்கின்றார்' என 'இந்தியா ருடே' செய்தியாளர் சேகர் குப்தா தெரிவித்துள்ளார்.

திரு. சேகர் குப்தா தெரிவித்திருப்பது போன்று சிறிலங்கா ஜனாதிபதி இரட்டை வேடம் போடுவது போல்தோன்றினும் தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு சமரசப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு என்பதைவிட இராணுவத்தீர்விற்கே முதன்மை வழங்கி வருகின்றார் என்பதே உண்மையாகும்.

கடந்த சனிக்கிழமை ஐ. தே. கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய சிறிலங்கா ஜனாதிபதி 1992ஆம் ஆண்டு முடிவிற்குள் வடக்கு - கிழக்கில் அமைதியை நிலைநாட்டுவோம். அப்பகுதியில் முப்படைகளும் அமைதியைக் காணும் நோக்கத்துடன் விசேடமாகச் செயற்பட்டு வருகின்றன. அதே வேளை 1989ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டவாறு அனைத்துக் கட்சிகளின் விருப்பத்தைப் பெற்று அரசியற் தீர்வு ஒன்று காணப்படும் எனத் தெரிவித்தார்.

இப்பேச்சானது தமிழர் தேசிய இனப் பிரச்சினையில் அரசாங்கம் இராணுவத்தீர்வையே தொடர்ந்தும் நாடி நிற்பதையே காட்டுகின்றது. சீனாவிடம் இருந்தும் செக்கோசெலவோக்கியாவிடம் இருந்தும் பெறப்பட்ட டாங்கிகளும், ஜெட் விமானங்களும் இராணுவவெற்றிக்குப் பெரிதும் உதவும் என இராணுவத் தரப்பும், அரச தரப்பும் நம்பிக்கை கொண்டுள்ளன. இதன் துணையோடு வடக்கில் பெரும் இராணுவ நடவடிக்கைக்கான முஸ்தீபில் இராணுவம் ஈடுபட்டும் உள்ளது.

மேலும் இனப்பிரச்சினைத் தீர்விற்கு திரு பிரேமதாசா இரட்டை வேடம் போடினும் இராணுவத் தீர்வு தொடர்பாக பேசுவது போல் சமாதானத் தீர்வு பற்றிப் பேசுவதாக இல்லை. பேசுவதாக இருப்பினும், சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவுக் குழு ஆகியவற்றைப் பற்றியுமே பேசுகின்றார் ஆனால் இவை இரண்டுமே பிரச்சினையைத் தீர்க்க உதவப் போவதில்லை. அரசாங்கம் பிரச்சினையில் இருந்து வழுவுவதற்கான மாற்றங்களே இவையாகும்.

சர்வகட்சிக் கூட்டங்கள் இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் இனப்பிரச்சினை தொடர்பாக எதுவித முன்னேற்றமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. சர்வகட்சி மாநாட்டில் அரம்பம் முதல் கலந்து கொள்ளும் ஐ. தே. கட்சிகூட தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு இதுவரை தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. இதேபோல் ஏனைய கட்சிகள் எவையும் தீர்வுத் திட்டங்கள் பற்றி முன்வைக்கவில்லை. அவைபற்றி விவாதிக்கவும் இல்லை. சிறு விவகாரங்களில் கூட இக் கூட்டத்தில் கருத்தொற்றுமை காணப்படவில்லை. ஆனால் இக் கூட்டத்தில் மூலம் இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு பற்றி அரசாங்கம் ஆராந்து வருவதாக பிரசாரப்படுத்துகின்றது.

சர்வகட்சி கூட்டங்களுக்கு பக்கபலமாக தற்பொழுது பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இத்தெரிவுக்குழுவிடம் திரு. தொண்டமானைத் தவிர வேறு எவரும் தீர்வு திட்டம் எதையும் இதுவரை சமர்ப்பித்ததாக இல்லை. இத் தீர்வுத திட்டம் இ. தொ. கா. வின் சார்பிலேயே திரு. தொண்டமானால் சமர்ப்பிக்கப் படுகிறது. இதேவேளை இத்திட்டத்திற்கும் பலமான எதிர்ப்பு கிளம்புகிறது.

அதாவது சிறிலங்கா அரசாங்கமோ அன்றி ஏனைய பேரினவாதக் கட்சிகளோ தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எதையும் வைக்கப் போவதில்லை இராணுவத் தீர்வைத் தவிர வேறு திட்டம் எதுவும் அவர்களிடம் இல்லை. இந்நிலையில், இனப்பிரச்சினை தொடர்பாக திரு தொண்டமான் போன்ற சிறுபான்மை இனத் தலைவர்கள் முன் வைக்கும் தீர்வுத் திட்டங்கள் அரசாங்கத்தின் காலங் கடத்தும் நடவடிக்கைக்கு அனுசரணையாக அமைவதோடு இராணுவ தயாரிப்புக்குத் தேவையான கால அவகாசத்தையும் வழங்கவே உதவும்.

# எல்லைப் பிரச்சினையில் பெரும் முன்னேற்றமில்லை

**- நரசிம்மராவ்**

(டில்லி)

இந்திய - சீன எல்லைப்பிரச்சினையில் அவ்வளவாக முன்னேற்றம் ஏற்படவில்லை என்று, முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கவுமில்லை என்றும் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் குறிப்பிட்டுள்ளார்.

ஆறுநாள் இந்தியவிஜயத்தை முடித்துக்கொண்டு சீனாவிற்கு திரும்பிய சீனப் பிரதமர் லீபெங்கை வழியனுப்பிவிட்டு செய்தியாளர்களிடம் பேசும் போது நரசிம்மராவ் இதனை தெரிவித்தார்.

உறவுகளை இயல்பாக்குவதற்கான பேச்சுவார்த்தைகள் இரு நாடுகளுக்கிடையேயும் இனியும் தொடரும் என்ற உறுதியைத்தான் சீனப்பிரதமரின் இந்த விஜயம் தந்திருக்கிறது என்றும் தெரிவித்தார்.

நடாத்தப்பட்ட பேச்சுக்கள் பற்றி பிறகு மதிப்பிடப்படும் என்று கூறிய நரசிம்மராவ் மொத்தத்தில் எதிர்காலத்திற்கு இது ஒரு நல்ல பயணம் என்றும் குறிப்பிட்டார்.

சீனப் பிரதமர் இந்தியாவில் ஆறு நாட்கள் தங்கியிருந்ததைப்போல இவ்வளவு நீண்ட காலத்திற்கு வேறெந்த அரசுத் தலைவரோ, நாட்டுத் தலைவரோ தங்கியிருந்ததில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

# பல்வேறு அம்சங்களுடன் 'வெளிச்சம்' வந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் வெளியீடான 'வெளிச்சம்' சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளிவந்துள்ளது. இச் சஞ்சிகையில் 'தலைவன் வாழி' என்ற தலைப்பில் தலைவர் பிரபாகரனின் 38ஆவது பிறந்த நாளையொட்டி புதுவை இரத்தினதுரை அவர்கள் எழுதிய கவிதையும், குண்டு மழையில் குளிப்பவர்கள் என்ற தலைப்பில் பேசி அவர்கள் எழுதிய கவிதையும் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் செ. யோ. சிவானேஷின் 'இன்னொரு சூரியனை'..., பொ. கணேசமூர்த்தியின் 'விடியலை நோக்கி விரைவாய் நடப்போம்' ப நம்பியாருரானின் "பாசாப்பிசாவு பெறுகிறது" வவனியா திலீபனின் "எனது பசி" நா. இராமலிங்கத்தின் "முடிந்த முடிவு" என்ற கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

மேலும் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய "மீட்பு" ஈழவாணன் எழுதிய "மனமூட்டுகள் உடைகின்றன" என்னும் சிறுகதைகளும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய "மனித வெளிச்சங்கள்" என்ற கலைப் பிலான ஜி. டி. கிருஷ்ண மூர்த்தி பற்றிய அறிமுகமும், இந்திய சினிமா பற்றிய சாருஜெயராஜின் கட்டுரையும் "இன்றைய நிழ்வில் அன்றைய நினைவுகள்" என்னும் கரும்பறவையின் நினைவு மீட்டலுமாக அழகிய பக்கங்களில் பொலிவுடன் வெளிச்சம் வெளிவந்துள்ளது. கருத்தைக் கவரும் அட்டைப்படமும், சிறந்த இதழ் அமைப்பும் வெளிச்சம் இதழினை மேலும் சிறப்புறச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# ரஞ்சன் கொலை முயற்சி; கோப்ரல் விசாரணையில்

முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணாவை நஞ்சூட்டிக் கொலை செய்ய முயற்சித்தார் என்ற குற்றத்தின் பேரில் இராணுவ பொலிஸ் பிரிவைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் ஒருவர் இராணுவ விசாரணைக்கு உட்படுத்தப் படவுள்ளார்.

தலைமறைவாகிய ஜே. வி. பி. தலைவர் ஒருவர் வழங்கிய தகவலைத்தொடர்ந்தே இவர் மீது இராணுவ விசாரணை முடுக்கி விடப்பட்டுள்ளது.

ஹோட்டல் ஒபரோயில் உயர் இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்ட விருந்தொன்றில் விஜேரட்ணாவின் உணவில் இந்த இராணுவப் பொலிஸ் நஞ்சைக் கலக்க முயற்சித்ததாகப் பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது.

---

### வடகிழக்கு

வட-கிழக்கு மாகாணத்தின் சொலிசிற்றர் ஜெனரல் நாயகம் முதலமைச்சரின் சிபார்சின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார். இந்த அமைப்பிற்கு ஒரு தலைமைச் செயலகம் அமையும். தேவையான பணியாளர்களும் நியமிக்கப்படுவார்கள்.

### நீதித்துறை:

இந்த ஆலோசனையின் பிரகாரம் மேல் நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படும். பிரதம நீதியரசர் தலைமையில் வேறு நீதிமன்றங்களின் நீதிபதிகள் கடமையாற்றுவார்கள். நீதிபதிகள் அனைவருமே முதலமைச்சரின் சிபார்சின் பேரில் ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்படுவார்கள்.

தொண்டமானின் ஆலோசனையில் செய்யப்பட்டுள்ள மற்றுமொரு ஏற்பாடு நீதிச் சேவை ஆணைக்குழுவாகும். இந்த ஆணைக்குழுவில் வடக்கு-கிழக்குமாகாணத்தின் பிரதம நீதியரசரும், இரண்டு நீதிபதிகளும் இருப்பார்கள். இந்த நியமனங்கள் ஜனாதிபதியால் செய்யப்படும்.

### நிலம்:

வடக்கிலும் கிழக்கிலுமுள்ள அரச நிலங்கள் சுயாட்சி அமைப்பின் உடைமைகளாக இருக்கும். நிலத்தை நிர்வகித்தல் மாகாண சுயாட்சி அமைப்பின் பொறுப்பில் விடப்படும்.

### சட்டமும் ஒழுங்கும்:

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு பொலிஸ் படையை உருவாக்கி அதனை நிர்வகிக்கும் பொறுப்பு மாகாண சுயாட்சி அமைப்பைச் சார்ந்தது ஐ ஜி பி உட்பட பல மட்டங்களிலுள்ள பொலிஸ் அதிகாரிகளை நியமிக்கும் பணியை சுயாட்சி அமைப்பு மேற்கொள்ளலாம்.

பொலிஸ் சேவை இருவகையில் அமையும். ஒன்று தேசிய பொலிஸ் சேவை, மற்றது மாகாண பொலிஸ் சேவை. இவ்விரண்டுபொலிஸ் சேவைகளுக்கும் இன விகிதாசார அடிப்படையில் ஆள் சேர்க்கப்படும். மேலும், பொராலிசாரும் விகிதாசார அடிப்படையில் ஆயுதப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

### திட்டமிடல், நிதிவிவகாரங்கள்

வடக்கு கிழக்கு மகாணங்களில் அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கும் அதிகாரம் சுயாட்சி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு இணங்க திட்டமிடல் ஆணைக்குழுவை அமைக்கும் முக்கியமான பணியும் சுயாட்சி நிறுவனத்துக்கு உரியது.

செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு திரட்டிய நிதியகமூலம் ஒதுக்கப்படும். அபிவிருத்தி முயற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கக் கடன் கட்டுக நிதி உதவியை சுயாட்சி நிறுவனம் வெளிநாடுகளிலிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

### பொதுச்சேவைகள்

பொதுச் சேவை நியமனங்கள் சுயாட்சி அமைப்பின் அதிகார எல்லைக்குட்பட்டது ஒழுக்காற்று நடவடிக்கை, வேலை நீக்கம், இடமாற்றம் ஆகியனவும் சுயாட்சி அமைப்பின் பொறுப்பிலிருக்கும்.

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு ஒன்று நிறுவப்படும். அமைச்சரவையின் சிபாரிசுக்கமைய ஆளுநர் மூன்று பேரை இக் குழுவுக்கு நியமிப்பார். குழுவில் ஒருவர் ஆளுநரால் தலைவராக நியமிக்கப்படுவார்.

### சிறுபான்மையினர் உரிமைகள்

வடகிழக்கு மாகாண ஆட்சிக்கு அதிகாரம் வழங்கப்படும் அதேவேளை அங்கு வாழும் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கப்படும் என்று நகல் திட்டம் தெரிவிக்கிறது.

முஸ்லிம் மக்களுக்கு வடக்கிலும் கிழக்கிலும் அவர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில் பிரதேச சபைகள் அமைக்கப்பட்டு, பிரதேச சபைகளின் ஒன்றியம் உருவாக்கப்பட்டு முஸ்லிம்களின் நலன் பேணப்படும்

முஸ்லிம்கள், சிங்களவரின் கல்வி, பண்பாடு மற்றும் விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் ஆகிய தொழில் துறைகளுக்கு நிர்வாக ஒழுங்கமைப்பதில் பாதுகாப்பு வழங்கப்படும்.

---

அதிகாரப்

காரம் சுயாட்சி அமைப்பின் சிபார்சின்பேரில் ஆளுநர் நாயகம் ஒருவர் நியமிக்கப்படுவாரென்ற மேலெழுந்தவாரியாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் முக்கியமான இந்த ஆளுநரின் அதிகாரங்கள் எப்படி வழங்கப்பட்டிருக்கிறது எவ்வித அதிகாரங்களைப் பெற்றிருப்பார் என்பது திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படாதிருப்பது மற்றொரு குறைபாடாகும்.

தொண்டமானின் உத்தேச திட்டத்தில் சுயாட்சி நிர்வாக முறைமை முக்கிய அம்சமாக உள்ளது. இந்த அமைப்பின் சுயாதீனம், அதற்குரிய அதிகாரங்கள் ஆகியவற்றைப் பெறுத்த வரையில் எதுவும் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை. மாகாணத்தில் அமைய இருக்கும் சுயாட்சி நிறுவனத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் உள்ள நிறைவேற்று அதிகாரங்கள் மற்றும் சுயாட்சி நிறுவனத்துக்கும் கொழும்பிலுள்ள மத்திய அரசுக்கும் இடையிலான தொடர்பு ஆகியன வரையறுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் தொண்டமானின் ஆலோசனையின் பிரகாரம் அமைச்சரவைக்கும், முதலமைச்சருக்கும் உள்ள தொடர்புகள் மற்றும் முதலமைச்சரின் அதிகாரங்கள் அல்லது இவை பற்றிய பரிந்துரைகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை

சுயாட்சி நிறுவனம் தொடர்பாக அதற்குரிய அதிகாரங்கள் முழுமையானதோ அல்லது வரையறை செய்யப்பட்டதோ? என்பதும் தெளிவாக்கப்படவில்லை.

